[1972 டிசம்பர் 15

முதுநிலை ஆசிரியர் பதவிகள்

* 183 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1971–72-ம் ஆண்டில் முதுநிலை ஆசிரியர் பயிற்சி பெற்று இள நிலைப் பதவியிலுள்ள ஆசிரியர்களில் எத்தனை பேர் முதுநிலை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1971–72-ஆம் ஆண்டில் முதுநிலை பயிற்சி பெற்று இளநிலை ஆசிரியர் பதவியிலுள்ள ஆசிரியர் எவரும் முதுநிலை ஆசிரியராக நியமிக்கப்படவில்லை. ஆயினும் 1972–73-ல் மேற்கூறிய ஆசிரியர்கள் 5,000 பேர் முதுநிலை ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, பயிற்சி பெற்ற பல ஆசிரியர்கள் இன்று வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகையால் ஆசிரியர் மாணவர்கள் விகிதத்தைக் குறைத்து, நிறையப் பேர் ஆசிரியர் வேலையில் அமரும் வாய்ப்பை உண்டாக்க அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான் 5 ஆயிரம் இடைநிலை ஆசிரியர்கள் இவ்வாண்டு ஈர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அடுத்த ஆண்டுக்கு 5 ஆயிரம் ஆசிரியர்களை எடுத்துக் கொள்ளும் திட்டமும் இருக்கிறது. பொதுவாக நிதி நிலை வசதி பெருகினால்தான் மாணவர்கள் ஆசிரியர் விகிதத்தை மாற்றுவதுபற்றி கவனம் செலுத்த முடியும்.

திரு. டி. கணபதி : பல நடுநிலைப் பள்ளிகளில் பி.டி. படித்தவர்கள் செகண்டரி கிரேட் ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறார்கள். அதை அரசு அறியுமா ? அவர்களை பி.டி. போஸ்டில் நியமிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பி. டி. படித்தவர்கள் இருக்க மாட்டார்கள். செகண்டரி கிரேடாக இருந்தவர்கள் பி.டி.யாக தங்களை உயர்த்திக் கொண்டு இருப்பார்கள். வாய்ப்பு ஏற்படும்போது இவர்களுக்கு முதற் சலுகை தரப்படுகிறது

1972 டிசம்பர் 15]

திரு. ப. முத்துசாமி : தலைவர் அவர்களே, சில ஊராட்சி ஒன்றியங்களில், தேர்ச்சி பெற்றுள்ள முதுநிலை பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், இளநிலை ஆசிரியர் ஸ்தானங்களில் நியமிக்கப்படக் கூடாது என்று ஜி.ஓ. போடப்பட்டது. இதற்குப் பின்னால் முதுநிலை ஆசிரியர்கள் இளநிலை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் சில இளநிலை ஆசிரியர்கள் ஊஸ்ட் செய்யப்பட்டு, வேலையில்லாமலிருக்கிறார்கள். அவர்கள் அரசாங்கத்திற்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். அவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்களாக இருப்பதால், அவர்களுக்கு விதிவிலக்கு தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இளநிலை ஆசிரியர்கள் முதுநிலை பயிற்சி பெற்றிருந்தால், அவர்களைத் தான் அந்தப் பதவிகளில் போடவேண்டும். இளநிலை ஆசிரியர்களைப் போடக் கூடாது என்றுதான் இப்பொழுது இருக்கிறது. பயிற்சி பெற்றவர்கள் கிடைக்காவிட்டால்தான் விதிவிலக்கு கொடுத்து இளநிலை ஆசிரியர்களைப் போடலாம் என்று இருக்கிறது. எங்கேனும் தனிப்பட்ட முறையில் அவர்களுக்குக் கேடு இருந்தால், அதுபற்றி அவர்கள் விண்ணப்பித்தால், முறைப்படி, சட்டப்படி அரசு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற கொள்கையைக் கொண்டிருக்கும் தமிழக அரசில், அரசு உயர்நிலைப் பள்ளிகளில் தகுதி வாய்ந்த தமிழ்ப் புலவர்கள் யாரேனும் தலைமை ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்களா? அப்படி இல்லையானால், இனியேனும் அந்த மாதிரி நியமிக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தலைமை ஆசிரியர்களாவதற்குரிய தகுதிபெற்ற தமிழாசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சில பல பள்ளிகளில் அப்படிப்பட்டவர்கள் பொறுப்பேற்றிருக்கிறார்கள். அதுபற்றி தனிக்கேள்வி போட்டால், விவரம் அளிக்கலாம்.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, இளநிலை ஆசிரியர்கள் முதுநிலை ஆசியர்களாகப் புரமோஷன் கொடுக்கப்படுவதற்கு, பயிற்சி பெற்ற காலத்திலிருந்து கணக்கெடுக்க வேண்டுமென்கிறார்கள்.

வேறு சிலர், ஆசிரியராகச் சேர்ந்த தேதியிலிருந்து கணக்கெடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆகவே, அதை எப்படி அரசு ஆராயப் போகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடவும்.

Course of Cosmetology

*184. *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Women's Polytechnic in Madras has started a course in Cosmetology; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) 1971–72-ஆம் ஆண்டு முதல் சென்னை மகளிர் பல் தொழிற் பயிற்சி கூடத்தில் ஒரு ஆண்டுகால ஒப்பனைப்பட்டப் படிப்பு பெண்களுக்காகவே நடத்தப்பட்டு வருகிறது. இப்பட்டப் படிப்பிற்கு வயது வரம்பு ஏதுமில்லை, புகுமுக வகுப்பு தேறியிருத்தல் வேண்டும். கல்விக் கட்டணம் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப் படவில்லை.

THIRU N. DENNIS : Sir, may I know the employment prospects of those who undergo this training?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுபற்றிய முழுவிவரக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. ஆனால், ஒப்பனை கலையிலே தேர்ந்தவர்கள் ஆங்காங்கு ஒப்பனைக் கூடங்கள் வைக்கிறார்கள். வேறு பல இடங்களில், சினிமாத் தொழில் போன்ற மற்றவைகளுக்குப் போவதற்குக்கூட இந்த ஒப்பனைத் தொழில் மிக மிகப் பயன்படுகிறது. தனியாகவும் தொழில் கூடங்கள் வைத்திருக்கிறார்கள். ஆக, தனியாகத் தொழில் நடத்தவும் பயன் படுகிறது. வேலை வாய்ப்புகள் எந்த அளவுக்கு இருக்கின்றன என்று தனிக் கேள்வி போட்டால், விவரம் அறிந்து சொல்லலாம்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, ஒப்பனை செய்து கொள்வது என்பது நாட்டிலே, ஆண்களும், பெண்களும்—எல்லோருக்கும் பொதுவாக வரக்கூடிய நிலைமை இருக்கிறது. சில சமயத்தில்